## $1400 திருட்டு நகையை அடகுக் கடையில் விற்க உதவினர்

# அஞ்சலைக்கு எதிராக குற்றச்சாட்டு!

கோலாலம்பூர், மே. 7-

திருட்டு நகையொன்றை அடகுக் கடையில் விற்க உதவியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட குடும்ப மாது ஒருவருக்கு எதிரான வழக்கு நேற்று மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

கடந்த 1989 ஜனவரி 6ம் தேதி ரவாங், வெல்மென் ஸ்திரீட்டில் உள்ள பீ லீ நகைக் கடையில், செல்வராஜு வெங்கடாசலம் என்பவருக்குச் சொந்தமான 1,400 வெள்ளி மதிப்புள்ள தங்கக் கைச் சங்கிலி ஒன்றை விற்க முயன்றதாக ஸ்தாப்பாக்கைச் சேர்ந்த அஞ்சலை த/பெ செல்லசாமி என்பவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த தங்க கைச் சங்கிலி திருட்டுப் பொருள் எனத் தெரிந்திருந்தும் விற்க உதவியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இன்னும் பிடிபடாமல் இருக்கும் தமது மகனுடன் சேர்ந்து இக்குற்றத்தைப் புரிந்ததாகவும் நீதிமன்றத்தில் கூறப்பட்டது.

அஞ்சலைக்கு ஏற்கனவே ஆயிரம் வெள்ளி ஜாமீன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் சாட்சியாக நகைக்கு சொந்தக்காரரான செல்வராஜு வெங்கடாசலம் விசாரிக்கப்பட்டார்.

1989 ஜனவரி 6ம் தேதி ஜாலான் ஆயர் ஜெர்னே ஸ்தாப்பாக்கில் உள்ள தமது வீட்டுக்கு சென்ற போது வீட்டின் கூரைப் பகுதி உடைக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது என்றும், உள்ளே சென்று பார்த்த போது ஒரு தங்கச் சங்கிலி இரண்டு தங்க வளையல்கள் ஒரு மோதிரம், 50 வெள்ளி சில்லறை காசுகள், ஒரு பெண்கள் கைக் கடிகாரம் ஆகியன திருடப் பட்டிருப்பதைக் கண்டதாகவும் அதன் மதிப்பு சுமார் 2,200 வெள்ளி என்றும் அவர் நீதிமன்றத்தில் தமது சாட்சியத்தில் கூறினர்.

தங்க கைச் சங்கிலி ஒன்றை செல்வராஜுவிடம் காட்டியபோது அது தம்முடையதுதான் என்று அவர் அடையாளம் காட்டினர்.

சங்கிலியின் பின்புறத்தில் எஸ்.எம்.ஆர். என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்ததைக் கொண்டுதான் அடையாளம் கண்டு கொண்டதாக எதிர்த்தரப்பு வழக்கறிஞர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் சொன்னர்.

இதைப் போன்றே எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட மற்றொரு தங்க கைச் சங்கிலியைக் காட்டினல் எது உங்களுடையது என அடையாளம் காட்ட முடியுமா என வழக்கறிஞர் ஜெரால்டு எலன் கோமஸ் வினவியதற்கு முடியாது என்று செல்வராஜு பதிலளித்தார்.

அஞ்சலைதான் நகையை தம்மிடம் விற்றதாக நகைக் கடைக்காரர் வியோங் யூ ஃபாட் கூறியதோடு, அம்மாதையும் நீதிமன்றத்தில் அடையாளங் காட்டினர்.

நகையை விற்க உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அஞ்சலை மற்றும் அவரது மகனின் அடையாள விவரங்கள் எழுதப்பட்ட பதிவு புத்தகமும் நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

துணைப் புலனய்வு அதிகாரி சார்ஜண்ட் அர்ஷாத் சாட்சியமளிக்கையில், தாம் திருட்டு நடந்த வீட்டை சோதித்தது முதல் அஞ்சலையை கைது செய்த பின், நகைக் கடைக்காரரை தடுத்து வைத்தது முதல் திருட்டுப் போன தங்க கைச் சங்கிலி போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டது வரை விளக்கினர்.

நகைக்கடைக்காரரின் உதவியாளர் நகையை செந்தூல் போலீஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து கொடுத்த பின் ஒரு நபர் ஜாமீனில் வியோங் யூ ஃபாட் விடுவிக்கப்பட்டார் என சார்ஜண்ட் அர்ஷாத் விளக்கினர்.

இவ்வழக்கின் பொறுப்பதிகாரிகளான இன்ஸ்பெக்டர் ஹெர்ரி சொங் மற்றும் இன்ஸ்பெக்டர் ஜைனுடின் ஆகிய இருவரும் நாளை விசாரிக்கப்படுவர்.

இவ்வழக்கு விசாரணை மாஜிஸ்திரேட் நூர்ஸனு பிந்தி அஸ்மா முன்னிலையில் நடைபெற்றது. அரசு தரப்பில் தலைமை இன்ஸ்பெக்டர் சாது சிங் ஆஜரானர்.

## காஷ்மீரில் அதிகார துஷ்பிரயோகம் குறித்து

# வழக்கு!

ஜம்மு, மே 7-

காஷ்மீர் மக்களுக்கு எதிராக பாதுகாப்பு அதிகாரிகள் அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

உள்ளூர் 'மனித உரிமை இயக்கம் ஒன்று இந்த வழக்கை தாக்கல் செய்தது. பாதுகாப்புப் படையினர் கடந்த இரண்டு ஆண்டு காலமாக இத்தகைய அதிகார துஷ்பிரயோகத்தை மேற்கொண்டு வருவதாக வழக்கில் அந்த இயக்கம் கூறியிருக்கிறது.

நான்கு வார காலத்தில் இதனை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிபதி எஸ்.எம். ரிஜாவி முன்வந்தார்.

**We acted for Anjalai in a Criminal case. The Hearing continues. She was acquitted and discharged without Defence being called**